செந்தமிழ்

தொகுதி 87 டிசம்பர் 93 பகுதி 4

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்
நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,பி.எட்.

பொருளடக்கம்

1. வாழ்வியற் சூழல் வளம்பெற — 1
க.சி. அகமுடைநம்பி பி.இ.,எம்.ஏ., புதுக்கோட்டை

2. தமிழ் இலக்கிய வரலாற்றில் வட்டாரச் சிந்தனைகள் — 10
பேரறிஞர் ம. மதியழகன், புதுவைப் பல்கலைக்கழகம்

3. அமிழ்தனார் — 18
கன்னக்குறிச்சி வை. தங்கமணி

4. சௌமியத்துறை காட்டும் இலக்கிய வகைகள் — 21
பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

5. தமிழ்ச்சங்கச் செய்திகள் — 27

வாழ்வியற் சூழல் வளம் பெற

— க.சி. அகமுடைநம்பி பி.இ.,எம்.ஏ.

முன்னுரை :

உயிரினங்கள் அனைத்தும் இயல்பாக வாழ்வதற்கு ஏது வாக அமைகின்ற சூழலை வாழ்வியற் சூழல் (Eco-System) என்று கூறலாம். உயிரினங்கள் வாழுகின்ற இந்த உலகையே உயிரினங்களின் 'இல்லம்' என்று சொல்வது தகும் இவ் இல்லத்து உயிரினங்களாம் புள்ளினங்கள், நுண்ணுயிர்கள், மரஞ்செடி கொடிகள் (தாவரங்கள்), மனிதர்கள் போன்ற அனைத்துயிர் களின் ஒருங்கிணைந்த வாழ்வியலையும், அதற்குரிய இல்லத்துச் சூழலையும் வகுத்தும் தொகுத்தும் காணுகின்ற அறிவியலை 'வாழ்வுச் சூழலியல் 'அல்லது' 'உயிர்ப்புச் சூழலியல்' (Ecology) என்று குறிப்பிடுவது பொருத்தமானது.

வாழ்வியற் சூழல் சீராக அமைந்து நிலைபெறத் தேவைப் படும் கூறுபாடுகள் பல. அவற்றுள் நிலம், நீர், காற்று, மரம் செடி கொடிகள் போன்றவை அடிப்படைத் தேவைகளாம். இவற்றைத் தனித்தனியாகவும் தொகுத்தும் பார்ப்பது, வாழ்வியற் சூழலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வழிகோலும்.

நிலம் :

நிலத்தைப் பெண்ணாக உருவகப்படுத்திக் காண்பார்கள் தமிழ்ப் புலவர்கள். "நில மடந்தைக்கு எழில் ஒழுகும்..." என்று வரும் தமிழ்த்தாய் வாழ்த்து நம்முடையது. தாய்க்கு நிகராக நிலத்தைப் போற்றுவது தமிழர் மரபு. நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றே போற்றுகிறோம்.

உலகக் கோளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாக விரிந்து கிடக்கிறது நிலப்பரப்பு. இந்த நிலப்பரப்பை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கருப்பு நிறத்து நிலவகை ஒன்று; 'கரிசல்' என்றிதற்குப் பெயர். செந்நிற நிலவகை மற்றது; 'செவ்வல்' என்று இதனைக் கூறுவர். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலவகைகள்தாம் எத்தனை! எத்தனை! ஐக்கிய

அமெரிக்க நாடுகளில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறு மண் வகைகள் உள்ளனவாம்.

நிலத்தின் மேல்மண், நீர்நிலைகள், இவற்றை மேவியுள்ள காற்று மண்டலம், தட்ப வெப்ப நிலைகள் முதலியவற்றைப் பொறுத்தே உயிரினங்களின் வாழ்வியற் சூழல் அமைகிறது.

நீர் ;

உலக உருண்டையில் மூன்றில் இரண்டு பகுதிக்கும் சிறிது கூடுதலாக உள்ளது கடல் பரப்பு. 'எங்கெங்குக் காணினும் நீர்ப்பரப்பு. ஆயின், குடிப்பதற்கோ துளி நீரும் ஈங்கில்லை' என்று கடலில் சென்று கொண்டிருந்த ஒருவன் புலம்பினானாம். ஆங்கிலக் கவிதையொன்று உணர்த்தும் செய்தி இது. உப்பு நீராம் கடல்நீரைக் குடிக்க முடியுமா?

நீரின் பயன்பாட்டை அறியாதார் யார்? நீரினால்தான் இந்த உலகம் இயங்குகிறது. 'நீரின்று அமையாது உலகு' என்பார் திருவள்ளுவர்.

உயிரினங்களுக்குத் தேவையான உணவு வகைகள் உருவாவதற்கு நீர் இன்றியமையாதது. உணவை உண்டாக்கக் காரணமாகும் நீர், தன்னளவிலும் உணவாகவும் பயன்படுகிறது.

கோடை வெயிலில், நா உலர்ந்து போகும் வேளையில் தேனமுது கிடைத்தாலும் அதனை வேண்டோம். தாகம் தணிக்கத் தண்ணீர்தான் வேண்டும் என்போம்.

நீர் இல்லையேல் புல்லுக்குக் கூட இங்கே புகலிடம் இல்லை. பின்னர் எப்படிப் பயிர்களை வளர்ப்பது? விளைச்சலைக் காண்பது?

வளரும் பயிர் :

நீரும் காற்றும் நிலமகளுடன் சேரும்போது உயிர்ப்பு நிலை உண்டாகிறது; பயிர் வகைகள் பிறப்பெடுக்கின்றன. பயிர்கள் முளைத்து வளர்ந்து மனித வாழ்வுக்கு வளம் சேர்க்கின்றன; பிற உயிர்கள் பலவற்றுக்கும் வாழ்வளிக்கின்றன.

நிலத்தின் தன்மைக்கேற்பவும், அதனுடன் சேருகின்ற நீரின் அளவைப் பொறுத்தும், இந்தச் சேர்க்கையை ஊக்குவிக்கின்ற தட்ப வெப்பச் சூழலைப் பொறுத்தும் பயிரினப் பரிணாம

வளர்ச்சி ஏற்படுகின்றது. உலகம் முழுவதும் உள்ள பயிர்வகைகள் 3,25,000 என்று கணக்கிட்டுள்ளனர்.

நீரும் காற்றும் நிலத்துடன் சேருவதற்குச் சூரிய ஒளி தேவைப்படுகிறது. சூரிய ஒளியிலிருந்தே ஊட்ட உணவைப் பயிர்கள் உருவாக்கிக் கொள்கின்றன. பயிர்களின் இந்தச் செயற்பாட்டைப் பச்சையம் என்கிறோம்.

உயிரின வாழ்வு முழுவதும் பயிர்களையே சார்ந்துள்ளது. புவியை மேவியுள்ள காற்று மண்டலத்தில் கரிய வாயு உள்ளது. இதனை உட்கொள்ளுகின்றன பயிரினங்கள்; கரியமில வாயுவை உட்கொண்டு உயிர்க்காற்றை வெளியிடுகின்றன. அவற்றின் செறிவு குறையும்போது காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் செறிவு கூடுகிறது. இதனால் புவியின் வெப்பநிலை அதிகமாகிறது. புவியின் வெப்பநிலை அதிகரித்தால், வாழ்வியற் சூழல் பாதிப்புறும்.

உணவுப் பொருள் மட்டும்தான் பயிரினங்கள் தருகின்றன என்பதில்லை. கட்டுமானத்துக்குரிய மரப் பொருள்கள், நாம் கட்டிக்கொள்வதற்குரிய துணி வகைகள், இன்னும் நிலக்கரி, எண்ணெய் மருந்து வகைகள், எழுது தாள்கள் என்று மனிதத் தேவைகள் யாவற்றையும் நிறைவு செய்வன வளரும் பயிர்களேயாம். அவற்றைப் பொறுத்தே மனித வாழ்வும் மண்ணுயிர் வாழ்வும் அமைவு காண்கின்றன.

ஆகவே பயிரினங்களிடம் மனித இனத்தின் கனிவுப் பார்வை எப்போதும் இருத்தல்வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மனிதனின் கனிவுப் பார்வையும் நல்ல பேணற்பாடும், உழுவல் அன்பும், உறுத்தான ஓம்புதலும் இல்லையென்றால், பயிரினங்கள் நிலைத்து நிற்றல் இயலாது.

வாழ்வியற் சூழல் வளம் பெற
நீரும் நிலமும் வளரும் பயிரும்:

உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த சூழலை இந்த வியனுலகம் நிலைப்படுத்துதற்கு நீரும், நிலமும், வளரும் பயிரும் நேரிய விகிதத்தில் நிலைபெறல் வேண்டும். இவற்றை மேவியுள்ள காற்று, தூய்மை கெடாமல் இருத்தல் வேண்டும். நாம் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க வேண்டுவன நிலம், நீர், காற்று, பயிரினங்கள் என்போம்.

வளமான நிலத்தைப் 'பொன் விளையும் பூமி' என்று போற்றுகிறோம். பொன்னை எப்படிப் பாதுகாக்கிறோமோ அதே அக்கறையுடன் நிலமகளை நாம் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும். இல்லையேல், நம்மை வாழ்விக்கும் மண், அரிக்கப் பட்டு சீர்குலைந்துவிடும்; விளைச்சலுக்குத் தகுதியற்ற ஒரு மலட்டுத் தன்மையை அது பெற்றுவிடும்.

அதேபோல் நீரையும் நாம் கையாள வேண்டும். வானின்று பொழிகின்ற மழை நீர் நில மகளுடன் இரண்டறக் கலக்குமாறு செய்வது, வாழ்வியற் சூழலை வளப்படுத்துகின்ற ஒரு செய்ம் முறையே. நீர் வளத்தைச் சேமிக்கின்ற செயல்பாடுகளில் நிறைவு காண்பதற்கு இன்னும் நாம் போதிய அளவு முயலவில்லை.

வாழ்வியற் சூழல் வளம்பெறவும், வலுவான முறையில் நிலை பெறவும் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாமல் செறிவான காடுகள் நிலை பெறல்வேண்டும்.

அண்மைக் காலம் வரை, பெரும் பரப்புகளில் காடுகள் செறிந்து நின்றன. பருவமழை பொழியும்போது அந்தக் காடுகள் மண்மீது அவை பரப்பிய இலை தழைகள், மழை நீரை உறிஞ்சி வைத்து, மெல்ல மெல்ல அதனை வெளியேற்றுவதாக இருந்தன. அதனால் ஆண்டு முழுவதும் ஆறுகளில் நீரோட்டம் தொடர்ந்து நிகழ்ந்தது.

காடுகள் அழிப்பு வாழ்வியற் சூழலுக்குக் கேடு :

காடுகளின் பெரும்பயனை மனிதன் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டான். வரம்பின்றிக் காடுகளை அவன் அழித்தான். அவ்வன்செயலால் தன் வாழ்வியலையே மனிதன் பாழாக்கிக் கொண்டான்.

காடுகளின் செறிவும் விரிவும் குறைந்துவிட்டதால் ஆண்டு தோறும் நாம் பெற்றுவந்த மழையளவு குறைந்துவிட்டது. மழை நீரை உறிஞ்சி வெளியிடும் காடுகள் போதிய அளவு இல்லாமல் போனதால், பெருமழை நாட்களில் மழைநீர் பெருக்கெடுத்துக் காட்டாற்று வெள்ளமாக ஓடி, கடலில் சென்று சேர்ந்துவிடுகிறது. குறைவான மழை பெறும் ஆண்டுகளில், நீர் நிலைகளில் நீர் சேராமல், வறட்சியின் பிடியில் நிலமகள் சிக்கிக் கொள்கிறாள்.

இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு பரந்த நிலப்பரப்பை ஆட்சி புரிந்த மாமன்னன் அசோகன். 'வனங்களையும் வன விலங்குகளையும் அழிக்காதீர்' என்று, தனது அரசாணையை, பாறைகளிலும் இரும்புத் தூண்களிலும் பொறித்து வைத்தான். இந்த அரச கட்டளையை மக்கள் போற்றிக் கடைப்பிடித்தார்கள்.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த, தென்னகத்தின் தொன்மொழிப் பாவலராம் திருவள்ளுவர்.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்

என்று ஒரு குறளை அருளிச் சென்றார். நிலமகளை நிழல் போர்த்தி அழகு படுத்துகின்ற காடுகளும், தெள்ளிய நீர் நிலைகளும், சமவெளியின் மண்பரப்பும், மலைகளும் ஒருங்கிணைந்து அமைந்திருப்பதே ஒரு நாட்டிக்குரிய வலுவான பாதுகாப்பு என்று வள்ளுவர் வரையறுத்தார்

வெவ்வேறு கால கட்டங்களின் மனித வரலாற்றைச் சின்னச் சின்ன கதைகளாக உருவாக்கி, ''வால்காவிலிருந்து கங்கை வரை'' என்று ஒரு வரலாற்றுக் காவியத்தைப் படைத்திட்ட அறிஞர், இராகுல சாங்கிருத்தியாயன், புனித கங்கை பற்றி எழுதுகிறார்.

''ஒரு புறம் பசுமை நிறைந்த வனம். இங்கே கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கும். சுவை மிகுந்த கனிகள். அவைகளைத் தின்று சுதந்திரமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய ஒலிகள். மறுபுறத்திலே தெள்ளிய நீர் பெருக்கெடுத்தோடும் புனித கங்கை.''

வாழ்வியற் சூழலின் நிறைவான காட்சி இது. இந்தச் சூழல் இன்று பாழ்பட்டுக் கிடக்கிறது. கங்கையைச் சூழ்ந்திருந்த காடுகளெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. ஏறத்தாழ 2033 கி.மீ. நீளமுடைய கங்கை நதி 480 கி.மீ. வரை மாசு படிந்த நிலையில் நாசமடைந்துவிட்டது. பல வகையான வேதியியல் பொருள்களும், வயிற்றுப்போக்கு, கொடிய காய்ச்சல், இரைப்பை சுழற்சி (gastre enteritis) போன்ற நோய்களை உண்டாக்கும் கிருமிகளும் அந்த மாசுடன் சேர்ந்துள்ளன.

இந்தியாவின் பெரும்பாலான ஆறுகளின் நிலை இவ்வாறு தான் மாசு நிறைந்துள்ளது. தேசிய சுற்றுப் புறச் சூழல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (National Enviromental Engineering and Research Institute) கணக்குபடி, நம் தேசத்தில் கிடைக்கும் நீரில் 70சதம் வரை மாசுபட்டு, குடிப்பதற்குத் தகுதியற்றதாக உள்ளது என்ற கண்டுபிடிப்பு நம்மையெல்லாம் திகைப்படையச் செய்கிறது. காடுகள் இல்லாமையால் இந்தப் பொல்லாங்குகள் தலைவிரித்து ஆடுகின்றன.

வாழ்வியற் சூழல் நலிந்துவிட்ட நிலைகள் :

நலிவுறும் வாழ்வியற் சூழலைப் பொலிவேற்றிக் கொள்ளும் திறன் இயற்கைக்கு உண்டு. ஆனால் இயற்கையின் இந்தத் திறனையும் சிர்குலைக்கும் அளவுக்கு மனிதனின் அழிவுச் செயல் பெருகிவிட்டது. காடுகள் அந்த அளவுக்கு அழிக்கப்பட்டு விட்டன. தேசிய தொலை உணர்வுக் கழகத்தின் 1980-82 கணிப்புப்படி, இந்தியாவில் இப்போதுள்ள காடுகளின் பரப்பு மொத்தப் பரப்பில் 14 சதவிகிதம் மட்டுமே. நன்கு வளர்ந்து செறிந்து இலைகளால் மூடப்பட்ட காடுகள் என்ற வகை 10 சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருக்கும்!

அரசு அளவில் சில புத்துயிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. பயன் தரா நிலங்கள் சீரமைப்புக்கென ஒருங் கிணைந்த முயற்சிகளை மேற்கோள்வதற்காக 1985-இல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. தேசிய தரிசு நிலங்கள் சீரமைப்பு வாரியம் (National Wasteland Development Board) என்பது அதன் பெயர்.

கங்கையைத் தூய்மைப் படுத்தும் திட்டம் மற்றொரு புத்துயிர்ப்பு முயற்சியாகும். இத்திட்டத்திற்கென 299 கோடி உருபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை மேற்பார்வையிட்டு வழி நடத்த கங்கை கட்டுப்பாட்டு நிருவாகம் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பசுமைப் புரட்சியின் விளைவுகள் :

பசுமைப் புரட்சி உணவு உற்பத்தியைப் பெருமளவு பெருக்கிக் கொள்ள உதவியது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை சுற்றுப்புறச் சூழலைப் பெரிதும் பாழ் படுத்தியுள்ளது என்பதும்,

பஞ்சாபு மாநிலத்தின் வளமான மண், அளவுக்கதிகமான பாசன நீரின் காரணமாக நீரின் பிடியில் சிறைப்பட்ட நிலமாக (Water-logged) மாறிவிட்டது என்று, தேராடூனிலுள்ள இயற்பியல் வல்லுநர், பேரறிஞர் வந்தனாசிவா, தம்முடைய பசுமைப் புரட்சியில் வன்முறை (Violence of Green Revolution) என்ற நூலில் விவரிக்கிறார்.

மண்ணின் விளைச்சல் திறனைப் பெருக்கும் நோக்கில் அதிகமான நீர்ப்பாசனம், அதிகமாக வேதியியல் உரம் என்ற நடைமுறை காரணமாக வளமான மண்ணின் உயிர்ப்பு நிலை பாதிப்புற்றதால் ஒரு வித மலட்டுத் தன்மை மண்ணுக்கு வந்துள்ளது.

பசுமைப் புரட்சியில் விதைக்கப்பட்ட கலப்பின விதைகள் காரணமாக நோய்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. புதிய விதை இனங்கள் பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானதால் அவற்றைத் தொடர்ந்து பெருமளவில் நோய்க் கொல்லிகளைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்பட்டது. வேதியல் பொருள்களின் மிகையால், மனிதனின் உடல் நலம் பாதிப்புக்கு உள்ளாகிறது.

பசுமைப் புரட்சியில் புகுத்தப்பட்ட எந்திரக் கலப்பைகள் (Tractors) காரணமாக மாடுகள் வளர்க்கும் நடைமுறை கிராமங்களில் பெரிதும் குறைந்துவிட்டது. மாட்டுச் சாணம் என்பது, கிராமப் புறங்களிலும் கூட அரிதான பொருளாக ஆகிவிட்டது. இதனால் நிலத்துக்கு எரு இடுதல் குறைந்து, வேதியல் உரங்களையே வேளாண் விளைச்சல் நம்பியிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. விளை நிலங்களில் ஏற்பட்டு வருகின்ற மலட்டுத் தன்மைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

மேலே குறிப்பிட்ட நூலில் பேரறிஞர் வந்தனா சிவா எழுதுகிறார் ''நிலத்தின் வளத்தை நிலையாகப் பாதுகாப்பதற்குத் தேவையான இலை தழை இடுபொருள்களைப் 'பயனற்றவை' என்று கருதியதன் மூலம் நல்ல வளமான உற்பத்தித் திறன் மிக்க நிலங்களையெல்லாம் வெறும் தரிசாகக் கிடக்குமாறு செய்தனர். நிலவளத்துக்குரிய தொழில் நுட்பம் என்று பசுமைப் புரட்சி அறிமுகப் படுத்தியதெல்லாம் உண்மையில் நிலச் சீரழிவுக்கான அழிவு நுட்பம் என்று நிருபிக்கப்பட்டது. கண்ணாடி இல்ல விளைவும், பூமி வெப்பமடைதலும் வேதியல் உரங்களின்

சூழலியல் சீரழிவிற்குப் புதிய உந்துதலை அளித்தன. வெடியம் (Nitrogen) அடிப்படையில் அமைந்த வேதியல் உரங்கள் பூமி வெப்பமாவதற்குக் காரணமாக வளித்தனிமத்தை (Nitrogen Oxide) வெளிப்படுத்துகின்றன. நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தியதன் மூலம் வேதியல் உரங்கள் உணவுப் பாது காப்பிற்குக் கேடு விளைவித்தன.''

ஆகவே, பசுமைப் புரட்சியின் நடைமுறைகளை மறுஆய்வு செய்து படிப்படியாக, இயற்கையான வேளாண் முறைக்கு நம் உழவர் பெருமக்களை இட்டுச் செல்ல வேண்டியது வாழ்வியற் சூழல் ஆர்வலர்கள் கருதிப் பார்க்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

முடிப்புரை :

இதுவரை எல்லா வளர்ச்சித் திட்டங்களும் வாழ்வியற் சூழலைக் கருதிப் பார்க்காமலேயே நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. வாழ்வியற் சூழலைப் புறக்கணிக்கும் எந்த ஒரு வளர்ச்சிப் பாதையும், வாழ்க்கையின் உயிர்ப்பு நிலைக்கு எதிரானதாகும் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருட் களை உருவாக்காத உற்பத்தி முறைகளைக் கண்டறிவதற்கு அறிவியலும் தொழில் நுட்பமும் உதவல்வேண்டும். வாழ்வியற் சூழலை வளப்படுத்துகின்ற வழிமுறைகளாக நமது பசுமைப் புரட்சியை மாற்றியமைக்க வேண்டும்.

காடுகளின் சதவிகிதத்தை உயர்த்துவதற்கென நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சில வயல்வெளி களைப் பழமரங்களுடன் கூடிய தோட்டங்களாக மாற்றிவிடலாம். இவ்வண்ணம் காடுகளின் பரப்பை அதிகமாக்கிக் கொள்ள முடியும். பழங்களை அதிகமாகப் பயன்படுத்தும் பழக்கம் மக்களி டையே ஏற்பட்டால் அவர்களுடைய உடல் நலம் சிறப்பாக அமையும். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு வேளையாகிலும் பழங்களை மட்டுமே உட்கொள்வது என்ற நடைமுறைக்கு மக்களை ஆற்றுப்படுத்தலாம். இதனால் இப்போது நெல் விளைக்கும் நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க பகுதியைப் பழத் தோட்டங்களாக மாற்றிட வழி பிறக்கும். இதனால் பாசன நீர்த் தேவையும் குறிப்பிடத் தக்க அளவு குறையும். அதே போல், மரங்களின் பெருக்கத்தால் மழைப் பொழிவு பெருகும்; வாழ்வியற் சூழல் வளம் பெறும்.

காடுகளை அழிக்கும் சமூகக் கேடர்களைக் கடுமையாகத் தண்டிக்குமாறு சட்ட திட்டங்கள் அமைதல் வேண்டும். காடுகளின் பெரும்பயன் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க முயலலாம். திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற தகவல் நிலயங்கள் மூலம் இதனை மேற்கொள்ளலாம். மேலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள பாடத் திட்டங்களில் வாழ்வியற் சூழல், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றைச் சேர்ப்பது இளைஞர்களிடையே நல்லதொரு விழிப்புணர்வை உண்டாக்கும். இளைஞர்களின் விழிப்புணர்வு காடுகள் அழிப்பைத் தடுக்கும் என்று நம்பலாம்.

இவ்வாறு வாழ்வியற் சூழல் வளர அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளல் வேண்டும். தொண்டு நிறுவனங்களை இம்முயற்சியில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வட்டாரச் சிந்தனைகள்

பேரறிஞர் **ம. மதியழகன்**

வட்டார இலக்கியம் குறித்துத் தனிநூல் எழுதுமளவிற்கு வட்டாரச் சிந்தனைகள் இலக்கிய வரலாற்றில் தாக்கம் பெற்றுள்ளன. வட்டார இலக்கியம் என்பது குறிப்பிட்ட வட்டாரச் சிக்கல்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை உருவாக்கும் மக்களைப் பற்றி வெளியிடுவதே வட்டார இலக்கியம். வட்டார இலக்கியம் என்ற குறியீடு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றா? இல்லையா? என்பது பற்றிய முரண்பட்ட கருத்துக்கள் படைப்பாளர்களிடத்தும் திறனாய்வாளர்களிடத்தும் நிலவுகின்றன. இவற்றையும் மீறிக் கரிசல் எழுத்தாளர், நெல்லைச் சிறுகதைகள், தஞ்சை நாவல்கள் என்று குறிப்பிடுமளவிற்கு இன்று வட்டாரச் சிந்தனைகள் எழுந்துள்ளதைக் காணமுடிகிறது.

தொன்மையானதும் இடைவிடாத இலக்கிய மரபு கொண்டதுமான தமிழ் இலக்கிய வரலாற்றில் வட்டார இலக்கியம் குறித்த இப்போதைய விளக்கத்திற்கேற்ற சிந்தனைப் போக்கு எழுந்திராவிட்டாலும், காலத்திற்கேற்ற வட்டாரக் கூறுகளும், சிந்தனைகளும் இடம் பெற்றே வந்துள்ளன. இவ்வட்டாரச் சிந்தனை பின் வளர்ச்சிப் போக்கை தமிழ் இலக்கிய வரலாற்றடிப்படையில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியத்தில் வட்டார வழக்கைப் பற்றிய நேரடி ஆய்வு காணப்படவில்லை. எனினும் ஒலிநிலை, சொல்நிலை. இலக்கண நிலை முதலியவற்றுள் காணப்பட்ட வழக்கு மாறுதல்கள் இங்குமங்குமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். 'சேரி மொழியின் செவ்விதற் கிளந்து' என்பது போன்ற சமுதாய வட்டார வழக்கு, நில வட்டார வழக்குகள் ஆகியன இலக்கண முறையில் சுட்டப்பட்டுள்ளன.

சங்கப் புலவர்கள், தாங்கள் சார்ந்திருந்த வட்டாரத்தின் சொற்களைத் தங்கள் பாடல்களில் கையாண்டுள்ளனர். அவையே

தொல்காப்பியரால் இயற்சொல், திசைச்சொல் எனப் பிரித்துக் காட்டப்படுகின்றன என்றும், வட்டாரக் கிளைமொழி குறித்த சிந்தனை இலக்கண முறையில் தொல்காப்பியரால் எடுத்தாளப் பட்டுள்ளது என்றும் ஒருசார் அறிஞர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

சங்க இலக்கியங்கள், பல புலவர்களால் பல்வேறு காலங் களில் பாடப்பட்டவை. புறநானூறு பற்றி உ.வே.சா. கூறும் போது,

'இந்நூற் செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள்
ஒரு காலத்தார் அல்லர்; ஒரு குலத்தார் அல்லர்;
ஒரு சாதியார் அல்லர்; ஓரிடத்தாரும் அல்லர்;
பாடியவர்களும் இத்தன்மையரே'

என்பது பெரும்பாலும் சங்கப் பாக்கள் அனைத்துக்கும் பொருந் தும் உண்மையெனலாம்.

புலவர்களின் பல பெயர்கள், ஊரைக் கொண்டு (மதுரை இளநானார், ஆலங்குடி வங்கனார்) விளங்குகின்றன. சங்கப் புலவர்கள் 473 பேர்களில் 178 புலவர்களின் வட்டாரம்/நாடு அடையாளம் காட்டப்பட்டுள்ளது. சங்க காலச் சமுதாயத்தில் ஒரு புலவர் ஓரிடத்திலிருந்து கொண்டு வாழ்க்கையை நடத்தும் சூழலில்லை. பல இடங்களுக்குச் சென்று, பலரை நாடிப் பரிசில் பெறும் வாழ்க்கைச் சூழலே இருந்தது. ஆகையால் புலவரின் அடையாளமாக மரபையொட்டி வழங்கப்பட்டு வந்தனவாகவே இப்பெயர்கள் கொள்ளப்பட வேண்டும்.

மேலும், சங்க காலத்தில் வட்டாரம் என்பது கருப்பொருள் களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்பட்ட இலக்கிய மரபாக இருந்தது. அக்கருப்பொருள்களும் நான்கு இயற்கை நிலப்பிரி வினை ஒட்டியே வெளிப்படுத்தப்பட்டன. புலவரின் ஊரையோ வட்டாரத்தையோ வெளிப்படுத்தும் வண்ணம் அமையும் வாய்ப்பு ஏற்படவில்லை.

சங்க காலத்தில் நிலவிய அரசியல் சூழலில் வட்டாரம் என்பது மிகச் சுருங்கிய எல்லைகளைக் கொண்டிருந்தது. முடி யுடை மூவேந்தர்களின் அரசுகளுக்குமுன் குறுநில மன்னர்களே தத்தம்பகுதிகளில் ஆண்டு வந்தனர், அவர்களின் ஆட்சி

எல்லைப் பரப்பு மிகச் சிறிய அளவிலேயே இருந்தது. கபிலரால் பாடப்பட்ட பாரியின் பறம்பு மலை முந்நூறு ஊர்களை உள்ள டக்கியது என்று அறிகின்றோம். பாரியை ஏத்துவதற்குக் கபில ருக்குப் பறம்பு மலையின் கருப்பொருட்கள் பயன்பட்டன என்ற அளவிலேயே பறம்பு மலை வட்டாரக் கூறுகள் வெளிபடுத்தப் பட்டுள்ளன.

சிற்றரசுகள் வீழ்ந்து பேரரசுகள் எழுந்த போது எல்லை கள் விரிவுபடுத்தப்பட்டன. இவ்வரசியல் எல்லைகளும் புலவர் களை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தின என்பதும் கேள்விக் குரியதாகும். பாண்டியனையும் சோழனையும் சேரனையும் ஒரே நேரத்தில் பாடிய புலவர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர். (பரணர் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியையும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனையும் பாடியுள்ளார். ஔவையார் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி போன்றோரைப் பாடியுள்ளார்).

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களைவிடப் பத்துப்பாட்டிலக்கியங்கள் குறிப்பிட்ட ஊரை அல்லது வட்டா ரத்தை விரிவாக விளக்கும்பான்மையில் அமைந்துள்ளன. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தை விரிவாகவே விளக்கு கின்றது. கரிகாலனின் சிறப்பை எடுத்துக் கூறுவதற்கு, பூம்பு காரின் பின்னணி சுட்டப்படுகின்றதேயொழிய பூம்புகார் மக்க ளின் எண்ணங்களும், செயல்களும் ஓரளவே சுட்டப்பட்டுள்ளன. மக்களை மையமாகக் கொள்ளாது மன்னனைப் போற்றுகின்ற மனப்பான்மையில் பத்துப் பாட்டிலக்கியங்கள் வட்டாரக் கூறு களை வெளிப்படுத்தியுள்ளன என்று கருதுதலே பொருத்தமாயி ருக்கும்.

சங்க இலக்கியங்கள் பாடப்பட்ட காலம் வேறு; அவை தொகுக்கப்பட்ட காலம் வேறு. தொகுக்கப்பட்ட காலச் சிந்தனை களின் அடிப்படையில் சங்க இலக்கியப் பாக்கள் வரையறை செய்திருக்கப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. எட்டுத் தொகை நூல்களுக்குத் தொகுத்தோர் தொகுப்பித்தோர் போன் றோர் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் எந்த நாட்டை/வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் என்ப தைக் கொண்டு அவ்வாறு தொகுக்கப்பட்ட பாடல்களில் அவ்

வட்டாரக் கூறுகளின் பிரதிபலிப்பு இருக்கிறதா என்றுகூட நோக்கலாம். இவ்வட்டாரப் பிரதிபலிப்பு என்பதைத் தொகுத்தவர்களின் கண்ணோட்டவழி அணுகவேண்டுமேயொழிய அதைப் பாடியவர்களின் கண்ணோட்டமாகக் கொள்ளக் கூடாது. பதிற்றுப்பத்து சேரநாட்டவரால் தொகுக்கப்பட்டிருக்கக் கூடும் என்பது சேர நாட்டு வட்டாரக் கூறுகள் அத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறதா என்று காண்பதற்குரிய ஆய்வுக் களத்திற்கு வழிவகுக்கும்.

பத்துப்பாட்டிலக்கிய வகையின் வளர்ச்சிப் படிநிலையாக இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அமைகின்றன. சிலம்பில்தான் வட்டாரக் கூறுஎன்பது ஓரளவிற்கு முகிழ்க்கத் தொடங்குகின்ற நிலையில் இருக்கிறது எனலாம். பூம்புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று தலைநகரங்களும் இளங்கோவடிகளின் நோக்கில் வட்டாரப் பின்னணி கொண்டு காட்டப்படுகின்றன. அம்மக்களின் வாழ்க்கைக் கூறுகளும், பண்பாட்டுச் சுவடுகளும், தொழில் முறைகளும், கலை வெளிப்பாடுகளும் ஓரளவுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், மக்களின் பேச்சுமொழி என்பது இடம் பெறவில்லை. சங்க காலந் தொட்டு எழுத்துமொழி, பேச்சுமொழி என்ற இரட்டை வழக்கு தமிழ்மொழியில் இடம் பெற்றிருந்ததால் இவ்விலக்கியங்களில் வட்டார மொழி என்பது இடம்பெற வாய்ப்பில்லாது போயிற்று. அரசியல் எல்லைகள் இளங்கோவடிகள் காலத்தில் தெளிவாக வரையறுக்கப் பட்டிருந்த போதும் அரசியல் நிலையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் சிலம்பில் வட்டாரச் சிந்தனை இடம் பெற்றிருந்தது எனலாம்.

இரட்டைக் காப்பியங்களுக்குப் பிறகு திருக்குறள் முதலான நீதி இலக்கியங்கள் வெளிப்பட்டன, தமிழக அரசியல் குழப்பங்களினால் அரசியல் எல்லைகள் மாறியும் வட்டாரச் சிந்தனைகள் மறைந்தும் எல்லா மக்களுக்குமுரித்தான நீதிவுரைகள் வெளிப்படுத்தப்பட்டன. சங்க இலக்கிய மரபில் பின்பற்றப்பட்ட கருப்பொருள் பின்னணி கூட இக்காலத்தில் தேவையில்லாது போயிற்று எனலாம்.

பக்தி இயக்கக் காலத்தில் வட்டாரச் சிந்தனை என்பது பக்தித் திருத்தலத்தில் ஒடுங்கியே வெளிப்பட்டது எனலாம். சைவ நாயன்மார்கள் தமிழகத்திலுள்ள எல்லாத் திருத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள இறைவனை வழிபட்டு, பல

தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளனர், எவ்வூருக்குச் சென்று எந்தக் கடவுளரைப் பாடிப் பரவினரோ அவ்வூரின் பின்னணிகள் ஓரளவுக்கு வெளிப்பட்டன. அவையும் கருப்பொருள் என்ற நிலையிலே விளங்கின.

"வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை
யென்றஞ்சி
சில மந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவை
யாறே"

என்ற பாடலில் திருவையாறின் இயற்கைப் பின்னணி பக்தி பிரவாகத்தில் பின்னடைந்தே நிற்கின்றது எனலாம். எனவே, வட்டாரச் சிந்தனை என்ற கோட்பாடுக்குள் பக்தி இலக்கியங்கள் அடங்கவில்லை என்பதும், இறையடியார்கள் பல திருத்தலங்களுக்கும் சென்று தம்மிறைவனைப் பாடி நின்றதால், குறிப்பிட்ட இறையடியாரின் வட்டார வெளிப்பாட்டை அவ்விலக்கியங்கள் கொள்ளும் வாய்ப்பை இழந்தன என்பதும் தெளிவாகின்றன.

காப்பிய காலமான இடைக்காலத்தில் கம்பராமாயணமும் சீவக சிந்தாமணியும் தழுவல்களாக அமைந்ததால் தமிழகப் பகுதியோ மக்களின் பண்பாட்டுக் கூறுகளோ இடம்பெற வாய்ப்பில்லாது போயிற்று. மேலும், கம்பனின் இலக்கியக் கொள்கை. கற்பனை உலகத்தை நினைத்ததால், இயல்பான நடைமுறை வாழ்க்கையைப் படம் பிடிக்கத் தவறிவிட்டது. பெரியபுராணம் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த அடியவரின் வாழ்க்கையை வெளிப்படுத்த முனைகிறது. எனினும், பக்திப் போர்வை வட்டார வெளிப்பாட்டை மூடி மறைத்து விடுகின்றது. வண்ணார், குயவர், வேடர், போன்ற மக்களின் பின்னணிகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு சேக்கிழாருக்குக் கிடைத்திருந்தும், இலக்கியக் கோட்பாடு பக்தி பிரவாக வழியே அடித்துச் செல்லப்பட வட்டாரப் பின்னணியை முழுமையாகப் பயன்படுத்த இயலாது போயிற்று.

சிற்றிலக்கியங்கள் வரையறுக்கப்பட்ட உருவத்தையும், பாடுபொருளையும் கொண்டிருந்ததால் இலக்கிய மரபை மீறுகின்ற ஆற்றலை இழந்தன. சான்றாக, உலா என்பது பாட்டுடைத் தலைவன் வீதியுலா வரும் போது ஏழுவகைப் பருவ மகளிர் அவனைக் கண்டு காதல் கொள்வதாக அமையப் பாடும் இலக்கிய

வகையாகும். இவ்விலக்கிய வகையில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பும் எழுவகைப் பருவ மகளிரின் காதல் குறிப்புக்களுமே இடம் பெறும் வாய்ப்புள்ளது. சிற்றிலக்கியங்களின் பாட்டுடைத் தலைவர்கள் எளிய மக்களுமல்லர். எனவே, அம்மக்களின் வட்டாரப் பின்னணிகள் இயல்பாகவே இடம்பெற வாய்ப்பில்லாது போயிற்று.

இச்சிற்றிலக்கிய வகைகளில் பள்ளும், குறவஞ்சியும் கீழ்த் தட்டு மக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டிருப்பி னும், அவர்களின் வாழ்க்கைப் பின்னணிகளைக் காட்டுவதைவிட, காதற் செய்கைகளைக் காட்டுவதிலேயே கவனம் செலுத்தின. சிற்றிலக்கியங்களில் பெரும்பாலானவை காதல், காமம், இரண்டை யும் முன்னிறுத்துவதாகவே அமைந்துள்ளன. இதனால் வட்டாரச் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டது.

இக்கால இலக்கியங்களைப் பொறுத்தவரையில் நாவல் இலக்கிய வகைதான் வட்டாரப் பின்னணியை அதிகம் வெளிப் படுத்தும் வாய்ப்புக் கொண்டதாகும். வட்டாரக் கூறுகளில் முதன் மையானது அவ்வட்டார மொழி. இதனை நாவலில் எடுத்தாள் வது குறித்து தொடக்க கால நாவலாசிரியர்கள் முதற்கொண்டு விவாதம் செய்யப்பட்டு வந்துள்ளது. பேச்சு மொழியை எந்த அளவிற்கு ஒரு நாவலாசிரியன் கையாள வேண்டும் என்பது குறித்து, பத்மாவதி சரித்திர ஆசிரியர் அ. மாதவையா அந் நாவலின் முன்னுரையில்,

> 'கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்தரப் பாத்திரங்கள் பேச நேரும் போது. இலக்கண வழுச்செறிந்த அவர் வாய்மொழிகளை அவ்வண்ணமே எழுவது வழக்கமாயினும், கிரந்தகர்த்தா நேரிற் கூறும் வரலாறுகள் வழுவின்றி யிருத்தல் வேண்டும்'

என்கிறார். இதனால் ஆசிரியர் கூற்று எளிய நடையிலும், பாத்திரக் கூற்று அதற்கேற்றவாறும் அமைய வேண்டும் என்று தொடக்க கால நாவலாசிரியர்கள் கருதினர் என்பதை உணர முடிகின்றது. இன்றைய நிலையில், ஆசிரியர் கூற்றிலும் வட்டார மொழி இடம் பெறுவதைக் காண முடிகின்றது கி. ராஜ்நாரா யணன், தோப்பில் முகம்மது மீரான் போன்றோர் நாவல்களில் இப்போக்கை அதிகம் காணலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் செய்யுள் இலக்கியம் என்பது மாறி, உரைநடை இலக்கியம் என்பது உருவான பின், மக்களின் பேச்சு மொழி இடம் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாயிற்று. இப்பேச்சு மொழி என்பதே வட்டாரத்தைச் சார்ந்து வட்டார மொழியாக உருவெடுக்கத் தொடங்கியது. விடுதலை இயக்க காலத்தில் காந்தியடிகள் கூறிய 'கிராமத்தை நோக்கித் திரும்புங்கள்' (Back to the village) என்ற கொள்கை தமிழ் எழுத்தாளர்களைக் குறிப்பாக, நாவலாசிரியர்களைப் பெரிதும் பாதித்தது எனலாம். எனவேதான் சங்கர்ராம், சர். சண்முகசுந்தரம், கே.எஸ். வேங்கடரமணி போன்றோரின் நாவல்களில் கிராமக் களன்கள் இடம் பெறலாயின. கிராமப் பின்னணியும், அம்மக்களின் பேச்சும் நாவல்களில் இடம் பெற்று, வட்டாரச் சிந்தனை முகிழ்ப்பதற்கான அடித்தளத்தை அமைத்தன. எனினும் 1960கள் வரை இப்போக்கு மெதுவாகவே நகரத் தொடங்கியது. 1966 ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய நாவல் விழாவில் கு. அழகிரிசாமி

> 'தமிழ் நாட்டில் நாவல் படைப்புத் துறையைப் பொறுத்த வரையில் இன்னும் அள்ளப் பெறாத சுரங்கம் இருக்கிறது; அது தான் வட்டார வாழ்க்கை எனும் சுரங்கம். எனவே, வட்டார வாழ்க்கை எனும் இப்புதிய சுரங்கத்தைத் தோண்டினால் இங்கே அகப்படும் பொருள்களைக் கொண்டு எத்தனையோ அரிய இலக்கியக் கோபுரங்களைக் கட்டலாம். அதாவது, அரிய நாவல்களைப் படைக்கலாம். இது தமிழ் நாவலாசிரியர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒன்று' என்று குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பின்னரே தமிழ் நாவலாசிரியர்கள் வட்டாரப் பின்னணி கொண்டு பெரிதும் படைக்க தொடங்கினர்.

மேலை நாட்டினரால் அறிமுகப்படுத்தப்பட்டு, பல்கலைக் கழகம். கல்லூரிகள் வழி பரவலாக்கப்பட்ட நாட்டுப்புறவியல் (Folklore studies) ஆய்வுகள் கிராம வாழ்க்கைக்கும் அம்மக்களின் பண்பாட்டு பழக்கவழக்கங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் போக்கை ஏற்படுத்தின. தொடக்ககால நாவலாசிரியர்களால் கதைக்கு முக்கியத்துவமும் கிராமப் பின்னணிக்கு இரண்டாமிடமுமே தரப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஆய்வுப் போக்கினால் குறிப்பிட்ட வட்டாரம்/இனத்தின் பல்வேறு பண்பாட்டுச் செயற்பாடுகளை வெளிப்படுத்தக் கதையை ஒரு கருவியாகப் பயன்

படுத்தும் நிலை ஏற்பட்டது. இதனை நாவலாசிரியர் நீலபத்ம நாபன் தன் 'தலைமுறைகள்' என்ற நாவலுக்கு எழுதிய முன்னுரையில்,

'.. எனக்குப் பழக்கமான ஒரு சமூகத்தின் நாடித் துடிப்புக்கள், பூர்வீக வரலாற்று விளக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், விழாக்கள், விளையாட்டுக்கள், வாழையடி வாழையாய் வந்தடைந்த கதைகள், பாடல்கள், பழமொழிகள், பிராந்திய கொச்சை வார்த்தைகள், பேச்சு வழக்குகள், தொனி விசேஷங்கள், வாக்கிய அமைப்புகள் இத்யாதி இத்யாதியானவைகளையெல்லாம் கூடிய மட்டும் சிந்தாமல் சிதறாமல் கலாபூர்வமாய் வெளிப்பிரகடனம் பண்ண இங்கே கதை வித்தானது பக்க பலமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

என்று குறிப்பிடுவதன் மூலம் தெளியலாம்.

இஃதன்றி, புதிய இலக்கியப் போக்குகளில் முன்வைக்கப்பட்ட நடப்பியல் (Realism) என்பதும், சமச்சீர் நடப்பியல் (Socialist Realism) என்பதும் இப்போக்கை மேலும் வளர்க்க உதவின. இதனால், நாவல்களில் கற்பனைப் போக்கு என்பது குறைந்து, நடப்பியல் போக்கு ஏற்பட்டது. இந்நடப்பியல் போக்கும் வட்டாரச் சிந்தனை செழுமையடைவதற்கு மேலும் வலுவூட்டியது.

முடிவாக, வட்டாரச் சிந்தனை என்னும் பூதம், இலக்கியக் கோட்பாட்டுக் குடத்தில் மூடியிடப்பட்டுக் கிடக்க, ஆங்கிலேயர் வருகைக்குப்பின் மூடியைத் திறந்து கொண்டு (பள்ளு, குறவஞ்சி) எட்டிப் பார்த்தது. இந்திய விடுதலைக்குப் பின் இப்பூதம் கோட்பாட்டுக் குடத்தையே உடைத்துக் கொண்டுபேருருக் கொண்டு வெளிப்பட்டு நிற்பதை நாவல் இலக்கியங்கள் மூலம் உணரலாம்.

'அமிழ்தனார்'

வை. தங்கமணி

தன்னேரில்லாத் தமிழ் மொழியில் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது சங்ககாலம். அக்காலத்தே திரட்டிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூற்களுள் 'குறுந் தொகை' என்னும் காதல் தொகுதியும் ஒன்று. அதனுள் சில பாடல்கள் சிதைந்தன; சில பாடல்களின் ஆசிரியர் பெயர்களே தெரியாது போயின. மேற்படி நூலில் 201 ஆம் பாடலில் பாடியோர் பெயர் காணப்படவில்லை. பாடியோர் யாராக இருக்கலாம் என்று கண்டு பிடிப்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும். பாடல் இதோ:

"அமிழ்தம் உண்கநம் அயலி லாட்டி
பால்கலப் பன்னதேக் கொக்கு அருந்துபு
நீல மென்சிறை வள்ளுர்கிப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி அயலது
முள்ளி லம்பனை மூங்கிற் றூங்கும்
கழை நிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே."

(பாடல் எண் : 201)

கூற்று: தலைவி கூற்று.

துறை: காவலை உடைய நகர் வேறுபாடு அறியாதிருக்க ஆற்றினாய் என்ற தோழிக்குத் தலைவி உரைத்தது. அஃதாவது, தலைவன் தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்ற தோழி தலைவியை நோக்கி, 'நீ வரைந்து கொள்ளும் துணையும் நன்கு பொறுத்துக் கொண்டு இருந்தாய் அல்லவா?, என்று வினவ, அங்ஙனம் பொறுத்துக் கொண்டிருந்த மைக்குத் தலைவி காரணம் கூறியது.

தோழி, நம்முடைய பக்கத்து வீட்டுத் தலைவி அமிழ்தம் உண்பாளாக. அஃது எதற்காக என்றால், பாலைக் கலந்தால் ஒத்த இனிமை உடைய தேமாங்கனியினையுண்டு, நீல நிற முடைய மெல்லிய இறகினையும், வளைந்த நகத்தினையும்

உடைய வெளவால்கள் நெல்லியின் புளித்த தன்மையினை யுடைய கனியினையும் உண்டு, அதன் பக்கத்தே உள்ள முள்ளில் லாத அழகிய பருந்த மூங்கில் கிளையிலே தூங்குகின்ற மூங்கில் கள் உயர்ந்து வளர்ந்த சோலைகளை உடைய, மலைகள் பொருந்திய நாட்டை உடைய தலைவன் வரைதற்கு வேண்டி வருவான் என்று எனக்கு அறிவுறித்தினாள் ஆகையால்.

தோழி, தலைவன் வரைதல் வேண்டி வருவார் என்று எனக்குப் பக்கத்து வீட்டுத்தலைவி அறிவுறுத்தினாள். அவ்வறிவு ரையைப் பற்றுக் கோடாகக் கொண்டு வரையுந்துணையும் ஆற்றி இருந்தேன். அந்நற்செய்தி கூறிய பக்கத்து வீட்டு மளையாள் அமிழ்தம் உண்டு வாழ்வாளாக, எனத்தலைவி வாழ்த்துகிறாள்.

தலைவன் வரைதல் வேண்டி வருவான் என்றதால் 'அமிழ்தம் உண்க' என்றாள். இதுபோல் இந்நூலிலேயே 83ஆம் பாடலில், உன்னை வரைந்து கொள்ள ஓங்கு மலை நாடன் வரும்' என்றதால் அமிழ்தம் உண்பதோடு வீட்டின்பமும் பெறட்டும் என்ற அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதமாகப் பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை' என்று வருவதையும் காண்க.

தான் அறிந்ததை பக்கத்து வீட்டிற்குச் சென்று சொல்லு தலும், அப்போது அறிந்த செய்தியை அவர்கள் இவருக்குச் சொல்லுதலும் இயல்பு என்பது தோன்ற அயலிலாட்டி' என்றார்.

கனி என்றால் இனிமை என்று பொருள். அதனோடு பாலும் கலந்தால் ஒத்த சுவை தேமாங்கனி தருதலின் 'பால் கலப்பன்ன' என்றாள் எனலாம். தலைவன் களவொழுக்க நிகழ்ச்சியை எடுத்தோதும் பொருட்டு 'நெல்லியம் புளி மாந்தி என்றார். பிறரும் 'நெல்லியம் புளிச்சுவை' என்று கூறுதலும் ஒப்பு நோக்குக. (நற்றிணை : 87)

தலைவியை வரைந்துகொண்டு துன்பமில்லாத இன்ப நிலையில் தம் இல்லத்தில் வாழ்தலைக் குறிக்க 'முள்ளில்' அம்பனை மூங்கிற் றூங்கும்' என்றார் எனலாம். தூங்கும் என்பது தொங்கும் என்றும், உறங்கும் என்றும் பொருள்படும். ஆனால் வெளவால் இயல்பாகத் தலைகீழாகத் தூங்குதலை 'தூங்கும்' என்பதுபடக் கூறினார் எனலாம்.

தலைவி அயல்மனைச் செல்லுதலும்-அயல்மனையாட்டித் தலைவியைக் காண வருவதலும் இயல்பு. அதுகாலை தன்னையும், ஊரையும் பற்றியும் பேசுவர். அவ்வாறு தலைவி அயல் மனைக் குச் சென்றிருந்தபோது கழை நிவந்தோங்கிய சோலை மலை கெழு நாடன் ஊர் சென்றகாலை கன்டவை-கேட்டவைகளை அயல்மனையாட்டி சொல்கிறாள். அஃது வாடிக்கிடந்த செடிக்கு ஓடிவந்த நீர் போல அச்செய்தி தலைவிக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதனால் 'அமிழ்தம் உண்க நம் அயலிலாட்டி' என்றாள். இப்போதும் நல்லது சொன்ன வாய்க்கு இனிப்புக்கொடு என்று சொல்வதும் கண்கூடு.

தலைவன் தலைவியை வரைந்து கொள்ளவரும் என்ற செய்தியும் அச்செய்தியால் தலைவியின் மகிழ்வும் தோன்றுவதற்கு ஏதுவாக இருப்பவள் அயலிலாட்டி. இப்பாடலுக்குக் கருவாக அமைபவள் அவளே, ஆகையால் இந்த இனிய செய்தியைச் சொன்னவளுக்கு ஏதாவது தரவேண்டும் - என்ன தருவது-அல்லது வாழ்த்துவது என்று எண்ணும் போது அரிதாகக் கிடைப்பதும்-சாவாமையைத் தருவதும்-அதனால் வீடு பேறும் தருவதான அமிதத்தைத் தரலாம் என்று எண்ணுகிறாள்.

பொருள் உயர்ந்தது-கிடைக்காதது-சிறப்புக்குரியது. அது தான் அமிழ்தம். 'அமிழ்தம்' என்ற சொல் பாடல் பொருளுக்குப் பலனாவது-தலை நிற்பது. ஆதலால் இப்பாடலுக்கு 'அமிழ்தனார்' எனப்பெயர் சூட்டலாம் அல்லவா?

சௌமியத்துறை காட்டும் இலக்கிய வகைகள்

பேரறிஞர். தா. ஈசுவரபிள்ளை

திட்டூர்த் தேசிகர் எனப் புகழப்பெறும் ரா. ஈசுரபாக்கிய ஈசாக்கு தேசிகர் குமரி மாவட்டத்திலுள்ள திட்டுவிளை என்ற திட்டூரில் கி.பி. 1858-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் படைப்புக்களில் ஒன்று "சௌமியத்துறை" என்பது. சௌமியம் என்பது சாந்தம் என்றும், துறை என்பது வழி என்றும் பொருள்படும். ஆகவே, சௌமியத்துறை என்பது மனச்சாந்தம் அல்லது அமைதியை அடையும் வழியைக் கூறும் நூல் எனப் பொருள் படும். இயேசுபெருமானின் போற்றற்கரிய பெருமைகளையும், அளப்பரும் அருட்குணங்களையும், வல்லமைகளையும் போற்றிப் பரவும் இந்நூலில் ஆசிரியர் இலக்கிய வகைகள் பலவற்றைக் கையாண்டுள்ளார். அவற்றுட் சிலவற்றைச் சுருக்கமாக இவண் காண்போம்

அம்மானை

அம்மானை என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்றாகும். இது நாட்டுப்புறப் பாடலாகத் திகழ்ந்து, பின் இலக்கியமாகும் பெருமை பெற்றது. கலம்பகம், பெண்பாற்பிள்ளைத் தமிழ் போன்ற பிற இலக்கிய வகைகளிலும் உறுப்பாக வரும் சிறப்பு உடையது. திட்டூர்த் தேசிகரின் வெண்செந்துறையில் அமைந்த பத்துப்பாடல்களில் இவ்விளக்கிய வகையை இயற்றியுள்ளார். இத்தலைப்பில் இடம்பெறும் பாடல்களின் அடிகள் அனைத்தும் ஈற்றில் 'அம்மானை' என்ற சொல் முடிவைப் பெற்றுள்ளன. இயேசுபெருமானின் பெருமைகளைப் புகல்வதுடன், நன்றே தினம் புரிதல் ஞானம்; நன்மை செய்யார் ஞானர் எனல் நாணம்; அல்லல்கட்டு ஆசை ஆணிவேர்; பேசாதன பேசல் பெரும் பாவம்: காயமகிழ்ச்சி கடைக்குதவாது: ஈசனொருவன் உண்டு எவ்வுயிர்க்கும்: இல்லையெனல் மூடமிறுமாப்பாம் என்பன போன்ற அறிவுரைகளையும் கூறும் நிலையில் இவ்விலக்கிய வகை ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளது.

இரங்கல்

அகப்பொருள் நூல்களில் தலைவன் பிரிவால் தலைவி இரங்கும் நிலையைக் காணலாம். தொல்காப்பியர் நெய்தல்

திணைக்குரிய உரிப்பொருளாக இரங்கலைக் குறிப்பிடுகின்றார். அகப்பொருளில் இடம்பெற்ற இரங்கல், பக்திப்பொருண்மையிலும் கையாளப்பெற்றது. பின்னர், இது பட்டினத்தாரின் ''இறந்த காலத்திரங்கல்'' சௌந்தரராச உடையாரின் ''துரோபதை யம்மை இரங்கல்'' போன்று தனி இலக்கிய வகையாக உருப் பெற்றது. திட்டூர்ந்தேசிகர் இவ்விலக்கிய வகையை ''ஏலாமைக் கிரங்கல்'' என்ற தலைப்பில் பாடியுள்ளார். இறைவனின் அருள் உள்ளத்தில் இடம்பெறுவதற்குத் தம்மால் தூயதொண்டனாக விளங்க முடியவில்லையே என்று ஏங்கும் ஏக்கப் பெரு மூச்சின் வெளிப்பாடாக அமைவது போல் இவ்விலக்கிய வகையை அமைத்துள்ளார் எனலாம். ஒவ்வோர் அடியும் ''ஆகில்லோ'' என்ற சொல் முடிவைப் பெற்றுள்ளது. இது இரட்டைக்குறள் வெண் செந்துறையாலான பத்துப்பாடல்களைக் கொண்டுள்ளது. கல்வி, ஒழுக்கம். அன்பு போன்றனவற்றைப் பெறவில்லையே என்றும், துன்பத்தைத் தாங்க இயலவில்லையே என்றும், பொய். ஆசை, சந்தானம் ஆகியவற்றை அகற்றவில்லையே என்றும் தன் நிலை கண்டு இரங்கும் போக்கில் பாடியுள்ளார்.

உந்தி

உந்தி என்பதும் மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்றாகும். உந்தி மறத்தல் என்ற பெயரிலும் இவ்விளையாட்டு சுட்டப்படும். பெண்டிர் இரு கைகளையும் இருமருங்கும் நேராக நீட்டிக் கால்விரல்கள் மேல் நின்று பாடிச் சுழன்றாடும் விளை யாட்டு உந்தி பறத்தல் ஆகும். ஈசுரபாக்கிய ஈசாக்கு தேசிகர் இவ்விலக்கிய வகையை ''ஞான வெற்றியுந்தி'' என்ற தலைப்பில் தருகின்றார். கலித்தாழிசையாலான பத்துப் பாடல்களை இது கொண்டுள்ளது. இப்பகுதியில் ஐம்புரம் அழித்தமை சுட்டப் படுகிறது.

''பொல்லாத வைம்புறம் பூண்டக் கிளிக்களித்தான்'' என்ற அடியைச் சான்றாகக் கூறலாம். ஒவ்வொரு பாடலிலும் இரண்டு, மூன்றாம் அடிகளில் ''உந்தி பற'' என்ற முடிவு இடம் பெறுகின்றது.

ஊஞ்சல்

ஊஞ்சல் என்பதும் மகளிர் விளையாடும் விளையாட்டு வகைகளில் ஒன்றாகும். இவ்விலக்கிய வகையின் செல்வாக்கி

னைச் சிலம்பம், பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கிய வகைகளிலும் காணலாம். நாட்டுப்புறப் பாடலாகிய ஊசல் அல்லது ஊஞ்சல் சேரமன்னனைப் புகழும் பொருண்மையுடன் சிலம்பில் இலக்கியச் சிறப்பைப் பெறுகின்றது. பின் பக்திப் பொருண்மையாலும் பாடப்பட்ட வளர்ச்சிப் போக்கைக் காணலாம். ஊசலிலிருந்து ஆடுவோர் பாடும் பாடலாக மட்டுமன்றி, ஊசலில் அமர்ந்திருக்கும் இறைவனை ஆட்டுவோர் பாடும் பாடலாகவும் அமைந்த நிலையைத் திருவரங்கத்தூசலில் காணமுடிகின்றது. சௌமியத் துறையில் ஊஞ்சல் என்ற இலக்கியவகை கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலான பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. இவண் ஊஞ்சலானது திவ்விய சீவியம், நல்ல சீவியம், நறிய சீவியம், சிறந்த சீவியம், சத்திய சீவியம், மெஞ்ஞானம் சீவியம் என உருவகப் படுத்தப் படுகின்றது.

காதல்

தலைவன்-தலைவி இணைவை விரிக்கும் நிலையில்அமையும் இலக்கிய வகையே காதல் ஆகும். பக்தியைப் பொருண்மையாகக் கொள்ளும்போது இறைவன் தலைவனாகவும், நூலியற்றும் புலவர் தலைவியாகவும் அமையும் போக்கை அறியமுடிகின்றது. சௌமியத் துறையில் இடபெறும் 'காதல்' என்ற இலக்கியவகை தனக்கும் இயேசுபெருமானுக்கும் இடையே நிலவும் தெய்வக் காதலை ஒரு பெண் புலப்படுத்தும் பாங்கில் அமைகின்றது. குறள் வெண்செந்துறையிலமைந்த பத்துப் பாடல்கள் இதில் இடம் பெறுகின்றன. என்னைப் பேண இவ்வுலகம் தேடி வந்தவன்; என்னைப் புண்ணியப் படுத்த வந்தவன்: கட்டழகன்: கடைவிழி நோக்கால் கவர்ந்தவன்: ஆச்சரிய அன்பன்: அனைத்துயிரும் வாழத் தன்னுயிரைத் தியாகமிட்டவன்: என்னை ஈடேற்றும் மீட்பன்; சொன்ன சொல் தவறாதவன்: எட்டாத தீங்கரும்பன்; விலையேறும் ஆணி முத்தன்: என் மிடிதீர இலவசமாய் மேவியவன்: தெய்விகத் திரவியன் என இயேசுவின்பால் காதல் கொண்ட பெண் அவர் பெருமைகளைப் புகழ்ந்து கூறுவதாய் இவ்விலக்கியவகை அமைகின்றது.

சாழல்

'சாழல்' என்பதும் மகளிர் விளையாட்டுகளில் ஒன்றேயாகும். இவ்விலக்கிய வகையில் இடம்பெறும் பாடல்களின் முதலிரண்டு அடிகள் வினவும் பாங்கிலும், பின் இரண்டு அடிகள் விடை

கூறும் பாங்கிலும், அமைகின்றன. திட்டூர்த் தேசிகர் அவர்கள் 'ஞான' என்று அடைகொடுத்து "ஞானச் சாழல்" என்ற பெயரில் இவ்விலக்கிய வகையைப் பத்துப் பாடல்களால் இயற்றியுள்ளார். இயேசுபெருமான் செங்குருதி பூசியமை, திருச்சிலுவை பூண்டமை, சுவிசேசம் பேசியமை, மரியன்னையின் மகனாகப் பிறந்தமை, பல இன்னல்களை அடைந்தமை, நரர்முன் நீதி கேட்க நின்றமை, முள்முடியைச் சூடியமை, கல்லறையுள் சென்றமை போன்றனவற்றிக்கான காரணங்கள் வினவப்பட்டு, இவையெல்லாம் மக்களின் நலனுக்காகவே என்று விடைகூறும் நிலையில் இவ்இலக்கிய வகையை ஆக்கியுள்ளார்.

தூது

ஒருவர் தாம் கூறவிரும்பிய செய்தியை உயர்திணையினரிடமோ அஃறிணையிடத்தோ கூறி இன்னாரிடம் சென்று தூது கூறி வருவாயாக என வேண்டும் போக்கில் அமையும் இலக்கிய வகையே தூது எனப்படும். ஆடவர் தூது அனுப்புவதாகவோ, பெண்டிர் தூது அனுப்புவதாகவோ இவ்இலக்கிய வகை அமையும். இவண் ஆசிரியர் தம்மை ஒரு பெண்ணாகக் கருதி இறைவனாகிய தலைவனிடம் குயிலைத் தூது அனுப்புகின்றார். இறைவனைப் போற்றுதல், இறைவனிடம் வேண்டுதல் தம் கருத்தைத் தெரிவித்தல் ஆகியவை செபத்துள் அடங்கும். (சௌமியத் துறை, ப.180) இவண் தலைவி தான் விமலன் வரப் பார்த்திருப்பதாகவும், தலைவன் மொழியைத் தினமும் நம்பி நெஞ்சில் ஆசை பெருகுவதாகவும் தலைவன் நினைப்பால் துன்பம் மூளுவதாகவும். உடல் மெலிவதாகவும் தன் நிலையை எடுத்து மொழிகின்றாள். சியோன் நாடனும் உயர்நாடனும், மாறா வளநாடனும் விண்ணாடனும் திருநாடனும் சுவர்க்க நாடனும், முத்தி நாடனும் ஆகிய இயேசு பெருமாளிடம் தன் நிலையைக் கூறி வருவாயாக எனக் குயிலை விளித்துத் தலைவி தூது வேண்டுகின்றாள். அறுசீர் விருத்தத்தாலான பத்துப் பாக்களில் இவ்விலக்கிய வகை அமைகின்றது.

பஞ்சரத்தினம்

செம்மணி, முத்து அல்லது வயிடூரியம், வயிரம், பச்சை, நீலம் என்பன ஐவகை இரத்தினங்கள், இவ்வைந்துவகை இரத்தினங்கள் போன்று உயர்ந்த, அறிவொளி வீசும் ஐந்து, செய்யுட்களைக் கொண்ட நூலாகையால் இது பஞ்சரத்தினம்

எனக் குறிக்கப்பெறுகின்றது எனலாம். பஞ்சரத்தினம் என்ற பெயருக்கு ஏற்ப இவ்விலக்கிய வகையை எண்சீர் விருத்தத்தாலான் ஐந்து பாடல்களால் தேசிகர் அவர்கள் ஆக்கியுள்ளார். இறைவனை அடைக்கலம் அடைந்து போற்றும் வகையில் இவ்விலக்கிய வ்கை இலங்குகின்றது. பாடல்களின் அனைத்து அடிகளிலும் ''சரணம்'' என்ற சொல் முடிவு காணப்படுகின்றது.

பத்து

பத்துப் பத்தாகப் பாடல்களை இணைத்து, ஒரு தொகுதியாக அமைக்கும் மரபு பதிற்றுப்பத்து, ஐங்குறு நூறு போன்ற சங்க நூல்களிலேயே காணப்படுகின்றது. திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களிலும் இம்மரபின் தொடர்ச்சியைக் காணலாம். திருவாசகத்தில் பல பகுதிகள் பத்து என்ற பெயருடன் அமைந்துள்ளன. திட்டூர்த் தேசிகர் 'பத்து' என்ற இலக்கிய வகையில் ஐந்து பகுதிகள் இயற்றியுள்ளார்.

இறைவனின் அருட்செயல்களை எண்ணி வியந்த நிலையில் பத்து வெண்செந்துறைப் பாடல்களை இயற்றி "அதிசயப் பத்து'' எனப் பெயரிட்டுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''அதிசயமே" என்ற சொல் முடிவு வந்துள்ளது.

இறைவனைக் காண இயலாத நிலையில், தம் உள்ளத் தவிப்பை வெளிப்படுத்தும் வகையில் பத்து எண்சீர் ஆசிரிய விருத்தப்பாடல்களில் அமைந்ததே "அலந்தேன் பத்து'' ஆகும். ஒவ்வொரு பாடலும் ''அலந்தேன்'' என முடிகின்றது.

இறைவனின் அருட்செயல்கள் தொடர்பாகத் தமக்கு ஏற்பட்ட ஐயங்களை 'அன்னே' என அன்னையை விளித்து வினவி விளக்கம் பெறும் போக்கில் பத்துக் கலித்தாழிசைப் பாடல்களால் ஆசிரியர் இயற்றியதே ''அன்னைப் பத்து'' ஆகும்.

இறைவன் பெருமைகளை எடுத்து மொழிந்து, பத்து முறை சரணம் எனக் கூறித் தம்மை அடைக்கலப் படுத்தும் போக்கில் ஆசிரியப்பாவால் ''சரணப்பத்து'' என்ற இலக்கிய வகையை ஆக்கியுள்ளார்.

இறைவனின் இன்னருளைப் பெறத் ''துணைத்தாள் தொழுதேனே'' என முடியும் பத்துப் பாடல்களில் ஆசிரியர் ஆக்கிய இலக்கிய வகையே ''தொழுதேன் பத்து" ஆகும்.

பதிகம்

இறைவனைப் புகழ்ந்து பத்துப் பாடல்களால் பாடப்பெறும் இலக்கிய வகையைப் 'பதிகம்' எனலாம். ஆனால், தேவாரத்தில் இடம் பெறும் பதிகங்களில் பதினொரு செய்யுட்களும் காணப்படு கின்றன என்பது இவண் சுட்டுதற்குறியதாகும். ஈசுரபாக்கிய ஈசான தேசிகர் அவர்கள் பல பெயர்களில் இப்பதிக இலக்கிய வகையைத் தந்துள்ளார்.

திருப்பல்லாண்டு

இறைவனை வாழ்த்திப்பாடும் பாடல் திருப்பல்லாண்டு எனப்படும். தேசிகர் இயேசு பெருமானை வாழ்த்திப் பாடு வதாகத் திருப்பல்லாண்டைப் படைத்துள்ளார். அடி நான்காய்த் தம்மிலொத்து வந்த குறள்வெண் செந்துறையாலான பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வோர் அடியிலும் "பல்லாண் டோத வாரீர்" என்ற முடிவு காணப்படுகின்றது. இறைவனின் பல்வேறு பெருமைகள் இவண் கூறப்பெறுகின்றன.

முற்சுட்டியனவற்றால் திட்டூர்த் தேசிகர் அவர்கள் தம் 'சௌமியத்துறை' என்ற நூலில் இயேசுபெருமானின் பெருமை களையும், ஆற்றல்களையும், அருட்டிறங்களையும், இயல்பு களையும் விளக்குவதற்கும், தம் எண்ணங்களை எளிமையாக இயம்புவதற்கும், மக்களை இறை நெறியில் ஈர்ப்பதற்கும், மக்கள் உள்ளத்தைக் களிப்படையச் செய்வதற்கும், இலக்கியச் சுவையை மிகுவிப்பதற்கும் பல்வேறு இலக்கிய வகைகளைக் கையாள் வதை ஓர் உத்தியாகக் கொண்டுள்ளார் எனலாம்.

மதுரை தமிழ்ச் சங்கம், மதுரை.

(நிறுவனர் - கொடை வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்)

தமிழ்த் தேர்வு பற்றிய அறிக்கை

பேரன்புடையீர்,

வணக்கம். பெரும் கொடைவள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களால் 1901-ல் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கம், அவர்களின் நெறிமுறையில் வழுவாது தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பணிபுரிந்து வருகிறதென்பதனை தமிழ் நெஞ்சங்கள் நன்கறியும். இச்சங்கத்தின் மூலம் பண்டித பட்டம் பெற்றோர் பலர். அவர்களில் பலர் வானுயர் புகழுடன் வாழ்ந்து வந்தனர். வாழ்ந்தும் வருகின்றனர். இப்போது இத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் செந்தமிழ்க் கல்லூரி, புல்கலைக்கழக இணைப்பிணைப்பெற்று இளம் இலக்கியம், இளங் கலை, முதுகலை, எம்ஃபில் ஆய்வு வகுப்பு ஆகியவற்றினை நடத்திவருகின்றது. 'பாண்டித்துரைத் தேவரவர்கட்கு மதுரையின் மையப்பகுதியில் திருவுருவச் சிலையை தமிழக அரசு நிறுவி சிறப்புச் செய்துள்ளது.

கடந்த 92 ஆண்டுகளாக பள்ளி மாணவர்கள் தமிழ்த் தேர்வில் உயர்மதிப்பெண் பெற தமிழ் தேர்வினை எழுதி வருகின்றனர். அரசினரின் பாடத்திட்டத்தின்படியே வினாக்கள் கொடுக்கப்பட்டு விடைகாணச் செய்துபரிசும், தகுதிச் சான்றும், மாநில அளவில் ரொக்கப் பரிசும் வழங்கி வருகின்றோம்.

சென்ற ஆண்டு முதல் + 2 முதலாண்டு மாணர்களுக்கு மாவட்ட அளவில் அரசு தேர்வு நடத்தி வருவதால் மதுரைத் தமிழ்ச்சங்கமும் + 2 முதலாண்டு மாணவர்களுக்கு சென்ற ஆண்டு முதல் தமிழ்த்தேர்வு நடத்தி வருவதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாண்டும் நடைபெறும் தேர்வில் மிகுதியான மாணவர் களை கலந்துகொள்ளச் செய்து நற்பயன் காண ஊக்குவிக்க

தலைமையாசிரியர்களையும், தமிழாசிரியர்களையும், கேட்டுக் கொள்கிறோம்.

தேர்வுக் கட்டணமும் தேர்வு நடைபெறும் தேதியும் நேரமும்

	கட்டணம்	நாள்		நேரம்
+2 இரண்டாமாண்டு	5.25	22-1-94	முதல் தாள்	10-1
			இரண்டாம் தாள்	2-5
+2 முதலாண்டு	5.25	29-1-94	முதல் தாள்	10-1
			இரண்டாம் தாள்	2-5
மெட்ரிக் பத்தாம்வகுப்பு	5.25	22-1-94	முதல் தாள்	10-12.30
			இரண்டாம் தாள்	2-4.30
பத்தாம்வகுப்பு (SS.L.C)	5.25	12 2-94	முதள் தாள்	10-12.30
			இரண்டாம் தாள்	2-4.30

கட்டணம் அனுப்பவேண்டிய கடைசி நாள் 2 1-94

குறிப்பு : தேர்வு நடத்துவதற்கான செலவாக 15 விழுக்காடு தேர்வுக் கட்டணத் தொகையில் கழித்துக்கொண்டு மீதித்தொகையை கேட்புக் காசோலை (Demand Draft) அல்லது காசோலை (Cheque) மூலம் அனுப்ப வேண்டும். பத்து மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் தேர்வுச் செலவிற்காக எதுவும் பிடித்துக்கொள்ளாமல் முழுத் தேர்வுக் கட்டணத்தையும் அனுப்பவேண்டும்.

விடைத்தாள்கள் திருத்தும் தமிழாசிரியர்கட்கு தாள் ஒன்றிற்கு ரூ, 1.25 வீதம் அன்பளிப்பு அளிக்கப்படும்.

தங்கள் பள்ளியில் தேர்வில் கலந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாக முன்கூட்டியே அறிவிக்க வேண்டுகிறோம். அதற்கான படிவம் (படிவம் 2) இந்த இதழின் கடைசிப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அப்பக்கத்தினை தனியாக எடுத்து பூர்த்தி செய்து உடனே அனுப்ப வேண்டுகிறோம்.

(1) மாணவர் பெயர்ப் பதிவுப்பட்டியல் (2) வரவு செலவு பட்டியல் (3) விடைத்தாள்கள் திருத்த விரும்பும் ஆசிரியர்

பெயர்ப்பட்டியல் முதலியன உங்கள் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி இருக்கின்றோம்.

தமிழ்ச்சங்கத் தேர்வு நடத்த தமிழக, பாண்டிச்சேரி அரசுகளின் ஆணையுண்டு.

தமிழ்ச்சங்கத்தோடு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54 தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001.

இந்நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்

இராமநாதபுரம் சேதுபதி மகாராணி
த இந்திராதேவி B.A.,
தலைவர்

தங்கள் அன்புள்ள
மா. தனுக்கோடிபாண்டியன்
செயலர்

1992-93 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு (S.S.L.C.) மாணவர்களுக்கும் +2 முதலாண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மெட்ரிக்குலேசன் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று நிலையில் மதிப்பெண் பெற்று ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரமும் மாநில அளவில் சிறப்பான முறையில் மதிப்பெண் பெற்று அதற்கான ரொக்கப்பரிசு பெறும் மாணவர்கள் பற்றிய விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான பரிசுத் தொகை தலைமை ஆசிரியர் அவர்கள் முகவரிக்கு 6-11-93-ல் அனுப்பப்பட்டுள்ளது.

10-ஆம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம். 1992-93

வ. எண்	மாணவர் பெயரும், பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத்தொகை ரூ. பை.
1.	என். பாலு மருதுதைக்கா மேல்நிலைப்பள்ளி கடையநல்லூர், நெல்லை-மாவட்டம்	189	முதல்	65-00
2.	எஸ். பிரிஜித் வளனரசி திருவள்ளுவர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பாண்டிச்சேரி (முதல் பரிசு ரூ 125 உடன் ரூ. 5 சேர்த்து இருவருக்கும் இத்தொகையை சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது).	189	,,	65-00
3.	வ. முனீஸ்வரன் ஏ.வி.எம்.எம். என். மேல்நிலைப்பள்ளி விளாம்பட்டி, காமராசர் மாவட்டம்	188	இரண்டாம்	40-00
4.	பி. சுபாஷினி இந்து மேல்நிலைப்பள்ளி ஆம்பூர் வ.ஆ.அ மாவட்டம்	188	,,	40-00

இரண்டாம் பரிசு ரூ. 75 உடன் ரூ. 5 சேர்த்து இருவருக்கும் இத்தொகையை சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது)

6.	டீ. செல்வராஜ் அமெரிக்கன் கல்லூரி மேல்நிலைப்பள்ளி தல்லாகுளம், மதுரை-2.	187	மூன்றாம்	50-00
6.	பிரேமலதா ஏ.வி.எம்.எம் என். மேல்நிலைப்பள்ளி விளாம்பட்டி, காமராசர்-மாவட்டம்	186	ஆறுதல்	20-00
7.	ஏ. பிரசன்னா புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி செங்கற்பட்டு	186	,,	20-00
8.	இரா. திருமூர்த்தி ஜீவானந்தம் அரசு மேல்நிலைப்பள்ளி முதலியார் பேட்டை, பாண்டிச்சேரி-4	186	,,	20-00
9.	எஸ். பழனி மருதுதைக்கா மேல்நிலைப்பள்ளி கடையநல்லூர் நெல்லை-மாவட்டம்	186	,,	20-00

வ. எண்	மாணவர் பெயரும், பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத்தொகை ரூ. பை.
10.	ஜே. சுதர்சன் புனித சூசைப்பர் மேல்நிலைப்பள்ளி செங்கற்பட்டு	186	ஆறுதல்	20 00
11.	சே. வேல்விழி ஏ.வி.எம்.எம்.என். மேல்நிலைப்பள்ளி விளாம்பட்டி, காமராஜர்-மாவட்டம்	186	,,	20-00
12.	எம். மணியம்மை பாயிலர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி கைலாசபுரம், திருச்சி-14	185	,,	20-00
13.	து.பீ. இமாக்குலேட் ஷீபா புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி திண்டிவனம், தெ.ஆ-மாவட்டம்	185	,,	20-00
14.	ஏ. உமா சந்திரிகா அரசினர் உயர்பள்ளி பாணாவரம், வ.ஆ.அ-மாவட்டம்	185	,,	20-00

15. கௌரி லூர்தன்னை மகளிர் உயர்பள்ளி கோ. புதூர், மதுரை-7		185	,,	20-00

1993 ஆம் ஆண்டு +2 முதலாண்டு சங்கத் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசினைப் பெற்ற மாணவர்களின் விவரம்

வ. எண்	பெயரும் பள்ளியின் முகவரியும்	தேர்வு எண்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத்தொகை ரூ.
1.	மு. சத்தியபாமா T&LC மகளிர் மேல்நிலைப்பள்ளி பேரையூர்ச்சாலை உசிலம்பட்டி மதுரை-மாவட்டம்	27775	180	முதல்	125
2.	எம். முத்துலட்சுமி கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மதுரை	28384	179	இரண்டாம்	75
3.	T. முகேஷ் அரசு மேல்நிலைப்பள்ளி ஒடுக்கத்தூர் வேலூர் வழி வ.ஆ.அ-மாவட்டம்-632033	21462	175	மூன்றாம்	25

வ. எண்	பெயரும் பள்ளியின் முகவரியும்	தேர்வு எண்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத்தொகை ரூ.
4.	ஆர் செந்தில்குமார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கள்ளக்குறிச்சி-606202 தெ.ஆ.மா. ஒரே மதிப்பெண்கள் பெற்ற இரு மாணவர்களுக்கு மூன்றாம் பரிசை பிரித்தளிக்கப்படுகிறது.	22023	175	மூன்றாம்	25
5.	சு. சண்முகம் செட்டியார் SM SM மேல்நிலைப்பள்ளி சுசீந்திரம் குமரிமாவட்டம்-629704		174	ஆறுதல்	20
6.	பி. பத்மா SSV மேல் நிலைப்பள்ளி கொடுமுடி-638151	19201	174	ஆறுதல்	20
7.	பி பாலசுப்பிரமணியன் விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி பசுபதிபாளையம் கரூர்-639004 திருச்சி மாவட்டம்	20036	174	ஆறுதல்	20

8.	பி. விநாயகமூர்த்தி அரசு மேல்நிலைப்பள்ளி வாணாபுரம்-606753 தி.ச. மாவட்டம்	21153	174	ஆறுதல் 20
9.	எம். இராமமூர்த்தி அரசு மேல்நிலைப்பள்ளி நாகலூர்-தெ.ஆ.மா-606203	21548	174	ஆறுதல் 20
10.	ப. இராசேசுவரி புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி திண்டிவனம்-604002 தெ.ஆ.மா.	21654	174	ஆறுதல் 20
11.	எஸ்.பி. ஜேன் அசம்இயா திரு. இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி கீழச்சேரி-631401 செங்கை MGR மாவட்டம்	23672	174	ஆறுதல் 20
12.	இராசகுமாரி முசுவிம் மேல்நிலைப்பள்ளி அபிராமம் இராமநாதபுர மாவட்டம்	26871	174	ஆறுதல் 20

வ. எண்	பெயரும் பள்ளியின் முகவரியும்	தேர்வு எண்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத்தொகை ரூ.
13.	ரா. நாராயணசாமி இன்மயா வித்யாலயா பி.எசி.ஆர். இராமசாமி ராஜா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இராசபாளையம் காமராசர் மாவட்டம்	27024	173	ஆறுதல்	20
14.	காஞ்சனா மகாத்மா மாண்பு சோன மேல்நிலைப்பள்ளி K.K. நகர் மதுரை	28084	172	ஆறுதல்	20
15.	S.R. பராசக்தி தியாகராசர் மேல்நிலைப்பள்ளி வசந்த் நகர் மதுரை	28279	172	ஆறுதல்	20

மாநில அளவில் ரொக்கப் பரிசு பெரும் +2 இரண்டாம் ஆண்டு மாணவர்களின் பெயரும் முகவரியும்

வ. எண்	பெயரும் முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு	தொகை ரூ.
1.	R. தனலட்சுமி (8694) புனித மரியன்னை பெ.மே.ப.			

காஞ்சிபுரம் நெடுஞ்சாலை செங்கல்பட்டு-603002	188	முதற் பரிசு	125
2. K.R. சுபலட்சுமி (13127) சௌராஷ்ட்ர பெண்கள் மே ப. அனுப்பானடி சாலை மதுரை-625009	187	2ஆம் பரிசு	75
3. இரா. தனலக்குமி (5318) புனித பிலோமினாள் பெ.மே.ப. திண்டிவனம்-604002 தென்னாற்காடு	186	3ஆம் பரிசு	50
4. M. தட்சிணாமூர்த்தி (3101) S.S.V. மே.ப. கொடுமுடி-638151 பெரியார் (DI.)	185	ஆறுதல் பரிசு	20
5. N. ஸ்ரீதேவி (7095) திரு இருதய பெ.மே.ப. கீழச்சேரி-631401 பேரம்பாக்கம் வழி செங்கல்பட்டு M.G.R. (DI.)	185	,,	20

வ. எண்	பெயரும் முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு	தொகை ரூ
6,	சலஜா (7285) திருவள்ளுவர் அ.ம.மே.ப. PONDICHERI-605001	185	,,	20
7.	ப. மங்கையர்க்கரசி (7743) சின்னாத்தா அ.பெ.மே.ப. முத்தியால் பேட்டை பாண்டிச்சேரி-605003	185	,,	20
8.	த. நிர்மலா (8266) கண்ணகி அ.ம.மே.ப வில்லியனூர்-605110 பாண்டிச்சேரி	184	,,	20
9.	C.R. பாலாஜி (8906) புனித சூசையப்பர் மே.ப. செங்கல்பட்டு-603002	184	,,	20
10.	கு அ. விமலா (11211) டி.இ எல்.சி. ம.மே.ப. பேரையூர்ச் சாலை உசிலம்பட்டி அ.நி/ மதுரை-Dt.,	184	,,	20

11. ச. சுரேஷ் (12449) அமெரிக்கன் கல்லூரி மே.ப. தல்லாகுளம் மதுரை-2	184	,,	20
12, K.J. ஜெயக்குமார் (12893) சௌராஷ்ட்ர மே.ப. 110. காமராசர் சாலை மதுரை-9	184	,,	20
13. S. சத்தியப்ரியா (10286) இராஜா மே ப. இராமநாதபுரம்	184	,,	20
14. K K. சுதா (14250) கேப்ரன் ஹால் ம.மே.ப. மங்களபுரம் மதுரை	184	,,	20
15. R. தவச்செல்வி (14531) காக்கைப் பாடினியார் ம மே.ப, சொக்கிகுளம் மதுரை-2	184	,,	20

பத்தாம் வகுப்பு (மெட்ரிக் குலேஷன்)

1. க, அனுராதா திரு. கிருஷ்ணசாமி பெ.மே.ப. 36 ஆம் தெரு 7ஆம் சென்டர் கே.கே. நகர் சென்னை-600078	187	முதற் பரிசு	65

2. ம. பரமேஸ்வரி (16497) புனித சூசையப்பர் குளுனி மே.ப. இலாசுப்பேட்டை (ஒரே மதிப்பெண் பெற்று முதல் நிலையில் தேர்வு பெற்றுள்ள இருவருக்கு பரிசுத் தொகை ரூ. 125 உடன் ரூ. 5 சேர்த்து தலா ரூ. 65) வீதம் பகிர்ந்துள்ளது.	187	முதற் பரிசு	65
3. ம. உமாப்ரியா (16902) புனித சூசையப்பர் மெ.உ.ப. திருச்சி சாலை கோயம்புத்தூர்	186	2ஆம் பரிசு	40
4. ரா. அனிதா (17534) நாய்ஸ் மெ. மே. ப. தல்லாகுளம், நரிமேடு ம.2. (ஒரே மதிப்பெண் பெற்று 2ஆம் நிலையில் தேர்வு பெற்றுள்ள இருவருக்கு 2ஆம் பரிசுத் தொகை ரூ. 75/- உடன் ரூ. 5/- சேர்த்து தலா ரூ. 40/- ஆக பகிர்ந்து கொடுக்கப்படுகிறது)	186	,,	40
5. இரா. கிருத்திகா (16922) தூய வளனார் மெ. மே. ப. வட்டம் 25 நெய்வேலி நகரம், தெ. ஆ. 607803	185	மூன்றாம் பரிசு	50

படிவம் 2

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர்

____

____

____

பெறுநர்

செயலாளர் அவர்கள்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை-625 001.

ஐயா,

எங்களுடைய பள்ளி பத்தாம் வகுப்பு, +2 முதலாண்டு, +2 இரண்டாமாண்டு மாணவர்கள் நம்முடைய தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் அனுப்பி இருந்த மாணவர் பெயர்ப் பட்டியலையும், தேர்வு பற்றிய பிற குறிப்புகளையும் எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியரின் எண்ணிக்கை ....

வகுப்பு	மாணவர்களின் எண்ணிக்கை	பணியில் மூத்த தமிழாசிரியர் பெயர்
1	2	3
பத்தாம் வகுப்பு(S.S.L.C)	____	____ ____
பத்தாம் வகுப்பு மெட்ரிக்குலேசன்	____	____ ____ ____
+2 முதலாண்டு	____	____ ____ ____
+2 இரண்டாமாண்டு	____	____ ____ ____

இங்ஙனம்

நாள் :

தலைமைத் தமிழாசிரியர்

குறிப்பு : கலம் 3-ல் ஒவ்வொரு பிரிவிலும் பணியில் மூத்த தமிழாசிரியர் பெயர் குறிப்பிட வேண்டும்.